**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரி - 2018**

---

## 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரியின் ("கல்லூரி") 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கல்லூரியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கல்லூரி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கல்லூரியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கல்லூரியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கல்லூரியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு கல்லூரி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

---------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொளள்ப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது

கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்லூரியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கல்லூரியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கல்லூரியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- கல்லூரி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கல்லூரியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள்** | | | |
| (i) | நிதி ஒழுங்கு விதி 104 | கல்லூரியின் ஒதுக்கப்பட்ட வாகனம் ஒன்று 2018 நவம்பர் 03 விபத்துக்குள்ளாகியிருந்ததுடன் விபத்து தொடர்பான இறுதி அறிக்கை கணக்காய்விற்கு | சேதத்தின் அளவு உயர்வாக இருந்தமையால் திருத்தத்திற்கான பொறுப்பை அமைச்சு எடுத்தது. அமைச்சு செயலாளரிடமிருந்து அனுமதியை பெறுவதில் | நிதி ஒழுங்கு விதிகளுடன் இணங்குவது அவசியமானது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்பட்ட சில நடைமுறை தாமதங்கள் காரணமாக காலம் எடுத்தது, தற்போது அமைச்சு திருத்தத்திற்காக பரிந்துரைக்கப்பட்ட பழுதுபார்க்குமிடங்களிலிருந்து விலைமனு கோரலை பெற தொடங்கியுள்ளதுடன் உண்மையான இழப்பு இன்னும் அடையாளம் காணப்படவில்லை. | |
| (ii) | நிதி ஒழுங்கு விதி 110 | இழப்புக்கள் மற்றும் சேதங்களின் பதிவேடு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ சபையால் நியமிக்கப்பட்ட குழுவிடமிருந்து 2017 ஆம் ஆண்டிற்கான சுற்றாய்வு சபை அறிக்கை கிடைக்கப்பெற்றதும், இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி ஒழுங்கு விதிகளுடன் இணங்குவது அவசியமானது. |
| (iii) | நிதி ஒழுங்கு விதி 272(3) | பணம் செலுத்தப்பட்ட உறுதிச்சீட்டுக்கள் மாதந்தோறும் கணக்காய்விற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை, அவை சம்மந்தப்பட்ட மாத முடிவிலிருந்து ஆறு வாரங்களுக்கு பிந்தாமல் அனுப்பப்பட வேண்டும். | உறுதிச்சீட்டுக்கள் ஒழுங்காக கணக்காய்விற்கு அனுப்பப்படுகின்றன. | நிதி ஒழுங்கு விதிகளுடன் இணங்குவது அவசியமானது. |
| (iv) | நிதி ஒழுங்கு விதி 757 | ஆண்டு காலப்பகுதியில் வருடாந்த சுற்றாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 20.12.2018 அன்று 2018 ஆம் ஆண்டிற்கான சுற்றாய்வு சபை குழு முகாமைத்துவ சபையினால் நியமிக்கப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டிற்கான சுற்றாய்வு சபையிடமிருந்தான அறிக்கை கிடைக்கப்பெறவில்லை. | நிதி ஒழுங்கு விதிகளுடன் இணங்குவது அவசியமானது. |
| **(ஆ)** | **சுற்றறிக்கைகள்** | | | |
| (i) | 2002 நவம்பர் 28 திகதிய ஐஏஐ/2002/02 இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணணிகள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துகள் பதிவேடு முறையாக பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிவேட்டை பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலையான சொத்துகள் பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும். |
| (ii) | 2003 யூன் 02 திகதிய பிஈடி/12 இலக்க பொது முயற்சிகள் | காலாண்டு முடிவடைந்து 30 நாட்கள் கடக்க முன்பு மீளாய்வாண்டுக்கான செயற்பாட்டு அறிக்கை முகாமைத்துவ சபையினால் பகுப்பாய்வு ரீதியாக மீளாய்வு செய்யப்பட்டு பொது முயற்சிகள் | வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகமே இத்தகைய அறிக்கையை திறைசேரி மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய பொறுப்பை | செயற்பாட்டு அறிக்கையொன்றை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு நேரத்திற்கு |

| | | | |
|---|---|---|---|
| சுற்றறிக்கை | திணைக்களம் மற்றும் பொது திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆயினும், கல்லூரி அதன்படி நடவடிக்கை எடுக்கவில்லை. | கொண்டது. அனைத்து பல்கலைக்கழக கல்லூரிகளினதும் செயற்பாடுகளையும் வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் அவர்களின் அறிக்கையில் உள்ளடக்குகிறது. | சமர்ப்பித்தல் அவசியமாகும். |

## 1.6 காசு முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆறு மாதங்களிற்கு மேலாக நிலுவையிலுள்ள ரூபா 394,080 தொகையான பதினான்கு காசோலைகள் நிதி ஒழுங்கு விதி 396 இன் படி பொறுப்பொன்றாக கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | காசோலைகளை பெற்றுக்கொள்ள பெறுநர்களுக்கு அறிவிக்கப் பட்டிருந்த போதும் சிலர் அதை செய்யவில்லை; சில பெறுநர் காசோலைகளை தொலைத்திருந்ததுடன் சிலர் அதை வைப்பிலிடவில்லை. நடைபெற இருக்கும் கூட்டத்தில் முகாமைத்துவ சபையினால் அனுமதிக்கப்பட்டதும் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளை செலவு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அனைத்து நிலுவையிலுள்ள தொகைகளும் கணக்குகளுக்கு கொண்டுவரப்படுதல் அவசியம். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கல்லூரியின் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 4,090,327 தொகையான பற்றாக்குறை ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 6,677,760 தொகை ஆகும். அதன்படி, நிதி விளைவுகளில் ரூபா 2,587,433 தொகையான முன்னேற்றம் ஒன்று அவதானிக்கப்பட்டதுடன் ரூபா 2,308,051 தொகையால் அரசாங்க மானியங்கள் அதிகரித்தமையே இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 36,755,265 கிரயமான ஐந்து இயந்திரங்கள் 3 வருடங்களுக்கு மேலாக குறிக்கப்பட்ட நோக்கங்களுக்கு முழுமையாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை . | இது தொடர்பாக சேகரிக்கப்பட்ட தகவல்கள் திணைக்கள தலைவருடன் அல்லது கற்பிக்கும் ஊழியர்களுடன் திருத்தப்பட அல்லது சரிபார்க்கப்படவில்லை என தெரிகிறது ஏனெனில் அவர்கள் இவ் உபகரணங்களுடன் கற்பிப்பதில் ஈடுபட்டுள்ளனர். | குறித்த நோக்கங்களுக்காக இயந்திரங்களின் உத்தம பயன்பாடு அவசியமானது. |

அ.<u>பண்ணை இயந்திர தொழில்நுட்பம்</u>

என்விகியூ மட்டம் 5 மற்றும் மட்டம் 6 கற்பித்தல் தொகுதிகளில் இரண்டு சில்லு உழவு இயந்திரம் மற்றும் சுய இயக்கப்படும் நெல் (Self Propelled Paddy) என்பன பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் இந்த உபகரணங்களின் நடைமுறை பயன்பாடுகளிற்கும் கற்பித்தலுக்கும் உழவு மற்றும் அறுவடை செயல் விளக்கத்திற்கு ஒரு வயல்/நிலம் தேவையாக உள்ளது. எங்களிடம் நிலம்/வயல் இல்லாமையினால் இது தற்போது குறைப்பயன்பாடு உடையதாக இருக்கின்றது.

ஆ. <u>உற்பத்தி தொழில்நுட்பம்</u>

சிஎன்சி வயர் கட் ஈடிஎம் இயந்திரம் என்விகியூ மட்டம் 6 இல் கற்கும் மாணவர்களுக்கான உற்பத்தி தொழில்நுட்பத்தின் செயன்முறை கற்பித்தல் தொகுதியில் முழுமையாக பயன்படுத்தப்படுகின்றது. எனவே இது விளைவற்றதோ அல்லது குறைப் பயன்பாடுடையதோ அல்ல.

இ. <u>உணவு தொழில்நுட்பம்</u>

ரிவிஈசி அங்கீகரித்த பாடத்திட்டத்தின் படி என்விகியூ மட்டம் 5 மற்றும் என்விகியூ மட்டம் 6 மாணவர்களுக்கான கற்பித்தலில் வெடிப்பு உறைவிப்பான்/தட்டு உறைவிப்பான் (The Blast Freezer/Plate Freezer) என்பன பயன்படுத்தப்படுகின்றது. இது குறைப்பயன்பாடுடையதாக இருந்தாலும் பாடத்திட்டத்தின் பிரகாரம் கற்பிப்பதற்கு தேவையான உபகரணம் ஆகும்.

## 3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுமொத்தம் ரூபா 12,630,553 தொகை ஓர் உதவி பதிவாளர், ஓர் உதவி நிதியாளர் மற்றும் ஓர் உதவி நூலகர் ஆகியோருக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து பதவியணிக்கான அங்கீகாரம் பெறப்படாமல் கடந்த 3 வருட காலமாக கல்லூரியினால் செலுத்தப்பட்டிருந்தது. | பதிவாளர், நிதியாளர் மற்றும் நூலகருக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி அனைத்து பல்கலைக்கழக கல்லூரிகளிலும் உள்ளதுடன் ஆரம்ப கட்டத்தில் வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் அனைத்து பல்கலைக்கழக கல்லூரிகளுக்கும் பதிவாளர், நிதியாளர் மற்றும் நூலகரினை நியமிப்பதற்கு பதிலாக உதவி பதிவாளர், உதவி நிதியாளர் மற்றும் உதவி நூலகரினை | அவசியமான அங்கீகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து பெறப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தெரிவு செய்து நியமித்தது. பதிவாளர், நிதியாளர் மற்றும் நூலகர் பதவியணிகளை முறையே உதவி பதிவாளர், உதவி நிதியாளர் மற்றும் உதவி நூலகராக மாற்றுவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் விண்ணப்பங்கள் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 திகதிய பொது நிதி சுற்றறிக்கை இல 01/2014 இன் படி காலாண்டு இலக்குகளை கொண்ட வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் அந்த இலக்குகளுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்களின் விபரம் என்பன கல்லூரியால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | காலாண்டு இலக்குடனான செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்கவும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2009 யூன் 09 திகதிய நிதி சுற்றறிக்கை இல டிஎம்ஏ/2009(1) இன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிலிருந்து உள்ளக கணக்காய்வு அலகை ஸ்தாபிக்காமை காரணமாக கல்லூரியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையில் பல பலவீனங்கள் அவதானிக்கப்பட்டிருந்தது. | உள்ளக அலகு ஒன்றை ஸ்தாபிப்பதற்கான பரிந்துரை விரைவில் கவனிக்கப்படும். | உள்ளக கணக்காய்வு அலகொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டியது அவசியமானது. |

### 4.3 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இல பிஈடி/12 இன் பிரிவு 7.4.1 இன் பிரகாரம் கணக்காய்வுக் குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வுக் குழுவொன்றை ஸ்தாபிப்பதற்கான பரிந்துரை விரைவில் கவனிக்கப்படும். | கணக்காய்வுக் குழுவொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டியது அவசியமானது. |

## 4.4 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒவ்வொரு பொது நிறுவனமும் ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான 2030 நிகழ்ச்சி நிரலுக்கு இணங்க செயற்பட வேண்டும் என்பதுடன் 2017 ஒக்டோபர் 03 திகதிய 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தை ஏற்றுக் கொண்டதன் மூலம் அனைத்து பொது நிறுவனங்களும் மேற்கூறிய விடயத்தை சுற்றறிக்கைகள் மூலம் அறிந்திருந்தன. அதன்படி, அந்தந்த நிறுவனத்தின் கண்காணிப்பிற்குள் வரும் செயற்பாடுகள் தொடர்பாக அது எவ்வாறு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது குறித்து அனைத்து பொது நிறுவனங்களும் விழிப்புடன் இருக்க வேண்டும். ஆயினும், மேற்கூறிய விடயம் குறித்து கல்லூரி விழிப்புடன் இல்லாமையால் இலக்குகள் நோக்கங்களுடன் தொடர்புபட்ட அதனது செயற்பாடுகளும் அவ் இலக்குகளின் அடைதலை அளவீடு செய்வதற்கு தேவையான குறிகாட்டிகளும் கல்லூரியினால் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. | 2017 ஒக்டோபர் 03 திகதிய 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்ட சுற்றறிக்கையை பயன்படுத்தி ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் குறித்த விழிப்புணர்வை ஊழியர்களிடையே ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் அடையப்பட வேண்டும். |